SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

அநுபந்தம்

புஸ்த௧] சிதம்பரம் ஏவிளம்பி௵ மார்கழி௴ ௰௨க்கு 1897௵ டிசம்பர்௴ 23உ [இல ௰௩

வைதீகசந்தரமௌலி

மகாபாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்.

முன்தொடர்ச்சி

மேலும் அதே அத்தியாயத்தில் 'ஸ்வாயம்பு⁴வோ மநு: பூர்வம் யதா²நுபூர்வ்யா வர்ணாச்ரமாந்' 'சுவாயம்புவமனுவே முன்னர் எல்லாவற்றையும் அறிந்து தருமங்களைச் சொன்னார்' என்று ஆரம்பித்து அவர்சொன்ன தருமங்கள் வருணாசிரமரூபங்கள், அவை பிருகு முதலிய மகரிஷிகளால் வெளியிடப்பட்டதென்றும் சொல்லி மனுஸ்மிருதியைப் பிரசம்ஸித்து அதில்கண்டபடி வர்ணிக்கப்பட்டுவரும் வருணாசிரமப் பிரகரணத்தின் இறுதியில் "அந்த மனுஸ்மிருதியிற் சொன்னபடி குறிக்கப்பட்ட சமாச்சிரமியாகிய சன்னியாஸியே இப்பதப்பொருள் என்பது" தெற்றெனப் புலப்படும். ஆதலாற்றான் சுசீலோபாக்யானத்தில் 14-ம் அத்தியாயத்தில்

ஶிக²ண்டி³நோ மஹாத்மா து ஸுத: ஸுஶீல இதி விஶ்ருத:|
தா⁴ர்மிகோ ரூபவாந் வித்³வாந் வேத³வேதா³ங்க³பாரக³:
ஸோ(அ)தீ⁴த்ய விதி⁴வத்³வேதா³ந் யதோ²க்தம் தபஸி ஸ்தி²த:|
த⁴ர்மஜ்ஞோ பா⁴க்³யயோகே³ந ஸந்ந்யாஸம் கர்துமைச்ச²த

'சிகண்டிமகாராஜனுக்கு சுசீலன் எனப் பெயர்பெற்ற புதல்வன் பிறந்தான்; அவன் தர்மிஷ்டன், ரூபமுள்ளவன், வேதங்களையும் வேதாங்கங்களையும் கற்று கண்ணோர்ந்தவன்; அவன் வேதங்களை விதிவழுவாது கற்று (பிர்ம்மசரியத்தை யனுஷ்டித்து) தர்மத்துடன் (கிரகஸ்தாச்சிரமத்தையுமடைந்து) தவத்தில் இருந்தான். (வானப்பிரஸ்தம் அடைந்தான்) தர்மஞ்ஞனான அவன் பாக்கியவசத்தால் ஸங்யாஸம் செய்துகொள்ள வேண்டும் என எண்ணங்கொண்டான்' என்று எடுத்து "அவன் ஹிமவத்பருவதத்தில் தர்மபதசித்தாசிரமத்தில்சென்று சிவபூஜை தேவபிதிருதர்ப்பணங்களைச்செய்துகொண்டே ஸ்ரீ சூரியமண்டலத்திலேயே பரமேசுவரனைத் தியானஞ்செய்து ஸ்தோத்திரஞ் செய்ததாகச் சொல்லும்பொழுது, ருத்திராத்யாயம் அதர்வசிரசு முதலிய வைதிகமந்திரங்களாலேயே ஸ்தோத்திரம் செய்தான் எனக்காட்டி......அங்கே தெய்வசங்கற்பத்தால் ஸ்ரீ சுவேதாசுவதர முனிவர்வந்தார் என நிரூபித்து, அவர் இச்சுசிலனுக்குத் தனது சாகோக்தமான தத்துவத்தை உபதேசிக்கவேண்டி ஸங்நியாஸம் செய்வித்தார் என்று

'ஸந்ந்யாஸிவிஹிதம் க்ருத்ஸ்நம் காரயித்வா விசக்ஷண:
உபதி³தே³ஶ ஜ்ஞாநம் ஸ்வஶாகா²விஹிதவ்ரதம்|
ஸர்வவேத³ஸாரஞ்ச பஶுபாஶவிமோசநம்|
அத்யாஶ்ரமமிதி க்²யாதம் ப்³ரஹ்மாதி³பி⁴ரநுஷ்டி²தம்|

"ஸங்நியாஸிகளுக்குரிய விதியை எல்லாம் அவனுக்குச் செய்வித்துத் தமது சாகையில் சொல்லப்பட்டதும் சர்வவேதசாரமும், பசுபாசமோசனமும், அத்யாச்சிரமம் எனப்பட்டதும், பிரமதேவராதியோர் அனுஷ்டித்ததுமான ஈசுவர ஞானத்தை உபதேசித்தார்" என்பனவற்றால் நிரூபித்துப் பிறகும்

க்ரமப்ராப்தம் ஸமஸ்தம் ச யதா²வத்ஸர்வஸித்³த⁴யே||
ஸர்வபாபோபஶமநம் வேத³ஸாரம் விமுக்திதம்|
அக்³நிரித்யாதி³கம் மந்த்ரம் ருஷிபி⁴ஸ்ஸம்ப்ரவர்திதம்|

"முறைப்படி எல்லாச்சித்திகளும் கைகூடவேண்டுமென்று கருதி, எல்லாப்பாவங்களையும் போக்குவதும், வேதசாரமானதும், பசுபாசமோசனமும், மகரிஷிகள்கண்டு அனுஷ்டிப்பித்ததுமான அக்னியாதி மகாமந்திரங்களை யுபதேசித்தார்" என்றுபந்யஸிக்கப்பட்டது. இவற்றால் ஸங்நியாஸபூர்வகமாய் உபதேசிக்கப்பட்ட அத்யாச்சிரமஞ் ஞானம் வைதிகமேயன்றித் தாந்திரிகமல்லவென்றது பசுமரத்தாணியாயது. மேலும் அச்சுசீலராஜன் நல்லொழுக்கத்தைப் புகழும் உபரிக்கிரந்தத்திலும்

ஸோ(அ)பி தத்³வசநாத்³ராஜா ஸுஶீல: ஶ்ரத்³த⁴யாந்வித:|
ஸாக்ஷாச்ச்²வேதாஶ்வதராத்³வேதா³ந்தஸாரமேதத³வாப்தவாந்|| ஸந்ந்யாஸீ ஸ்தி²தஸங்க³: ஸந் த்³விஜமுக்²யோ மஹாமுநி: | ஶாந்தோ தா³ந்தோ ஜிதக்ரோதோ⁴ யதி: ஸந்ந்யாஸவிதி⁴ஶ்ருத:||

'அவனும் அம்மகானுபதேசத்தால் சிரத்தையுடன் சாக்ஷாத் பாசுபதனுகி வேதாப்யாஸத்திலே (சுவேதாசுவதர சாகையின் அப்பியாஸத்தில்) நிரதனுய் சரீரம் எல்லாம் பஸ்மோத்தூளனம் செய்துகொண்டு (பரமஹம்ஸருக்குச் சந்யாஸோபநிடதம் கூறியவாறு). சாந்தனுயும் தாந்தனுயும் (சாதனசதுஷ்டயம்பெற்று) ஸந்யாஸவிதியைப் பற்றி நின்முன்' என்றுபசங்கரித்தது. இவ்வளவால், சுவேதாசுவதரசாகை

'அத்யாச்ரமிப்ய: பரமம் பவித்ரம்'

'அத்யாச்சிரமிகளுக்குரியது பரமபவித்ரம்' எனப்பட்டது ஸந்யாஸிக்கே முக்யமாகவுரியதென ஏற்பட்டது. ஆகவே அத்யாச்சிரமச்சொல்லுக்குச் சந்யாஸம் என்ற வியாக்யானம் பொருத்தமுடையதேயன்றி அதற்கு அவைதிகதீக்ஷையைப் பொருளாகச்சொல்வது நியாயமாகாது. அற்றேல் அதற்குப் பஸ்மத் திருபுண்டரபரமாக உரைசெய்வதும் தவறேவெனின் அற்றன்று. அது அத்யாசிரமிகளுக்குரிய விரதமாகவே, அதையும் அத்யாச்சிரம விரதம் எனலாம் என்ற கருத்தினுலேயே புராணங்கள் அங்ஙனம் விரித்தனவாதலால், யாம் எடுத்துக்காட்டிய பொருளில் குறை யாதுமில்லையென்க. இதேபொருள் சூரியபுராணத்தும் சுசிலோபாக்யானத்தில் சொல்லப்பட்டதென்பதை முன்னிருபித்தோம். இவ்வளவால் ஷை ஐயர் அத்தியாசிரம மந்திரோப நிடதமாகிய சுவேதாசுவதரம் (தவப்ர பாவாத் தேவப்ரசாதாச் சப்ரும்மகச் வேதாப்ரோவாசகம் யத்ருசிசங்கசுஷ்டம்- வேதாந்தே பரமம்குக்யம் புராகல்ப ப்ரசோதிதம்- நாப்ரசாந்தாயதாதவ்யம் நாபுத்ராய சிஷ்யாயவைபுநகா)

இருஷிசமூகங்களால் வழிபடற்பாலதாம் பரமப்வித்திரமாகிய பிரமத்தைத், தவப்பிரபாவத்தையும் சிவப்பிரசாதத்தையும் கொண்டு சுவேதாசுவதரமுனிவர் அத்தியாசிரமிகளுக்கு (பாசுபததீக்கையுடையாருக்கு) உபதேசித்தாரென்றும் இது முந்திய கற்பத்திற் சொல்லப்பட்ட வேதாந்தத்தின் மிகுரகசியமானது என்றும் பாசுபததீக்கையுடைய (பக்குவர்க்கன்றி மற்றையோர்க்கு) மறைக்கற்பாலதாய் அடக்கமில்லாப் புத்திரர்க்கேனும் சீடருக்கேனும் உபதேசிக்கற்பாலதொன்றன்றும் என்றும் கூறிற்று. மேலேபோந்த (1-ம்) இலக்கத்துச் சூதசங்கிதை ஞானயோககாண்டமும், (2-ம்) இலக்கத்துச் சூதசங்கிதை யஞ்ஞவைபவகாண்டமும், (3-ம்) இலக்கத்துப் பிரமகீதையும், (7-ம்) இலக்கத்துப்பிரமோத்தரகாண்டமும், (9-ம்) இலக்கத்து வாயுசங்கிதையும் கூறியவாறு மேலேபோந்த சுவேதாசுவதரோபநிடத மந்திரத்துட்காணப்படும். 'அத்தியாசிரமம்' என்று வேதவியாஸர் முதலாயினோர் கருத்துக் கியையப்பொருள் படுத்தாது சங்கராசாரியர் தமது சுவேதாசுவதரோபநிடத பாஷ்யத்திலே அவ்வத்தியாசிரமம் என்னும் பதத்துக்கு 'பரமஹம்ச சந்நியாசி' என்று பிழையுறவுரைத்தது எப்பிரமாணத்தினுலோ என்பதற்கு உமாபதிசிவாசாரியசுவாமிகண்மீது பிழைபிடிக்கின்றேமென்று முதற்பட முனைந்துவந்த சென்னை ஆரியனுர் யாதுபிரமாணம் விடுக்கின்றுரோ? சங்கராசாரியர் சீடர் சூதசங்கிதையைச் சார்ந்த பிரமகீதையில் அத்தியாசிரமமென்னும் பதத்துக்கு ஸந்நியாசி என்றேனும் வேறென்றேனும் சொல்லாது வாளாவிடுத்தாரென்பது, பலசூதசங்கிதா வியாக்கியான ஏட்டுப்பிரதிகளாலும் நாகரலிபியில் அச்சிடப்பட்ட சூதசங்கிதையினுலும் அறியப்படுவதேயாக, பெங்களூரிலே தெலுங்குலிபியிலே சூதசங்கிதை வியாக்கியை அச்சிட்டோர் அவ்வத்தியாசிரமம் என்னும் பதத்துக்குச் சர்வகர்ம ஸந்நியாசி என்று மாற்றி சங்கராசாரியர் சொன்னகருத்தைத் தழுவினராக அச்சிட்டுவிட, சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராதிபரவர்களும் அப்பெங்களூர் தெலுங்குலிபி சூதசங்கிதை வியாக்கியையைப் பார்த்துத் தம்மால் அச்சிடப்பட்ட சூதசங்கிதையிலும் சர்வகர்ம சந்நியாசி என்று அச்சிட்டுவிட்டார். வித்தியாரணியர் பிரமகீதையிற்கண்ட அத்தியாசிரமம் என்னும் பதத்துக்குத் தமது ஆசாரியரோடிணங்கி பரமஹம்சஸந்நியாசி என்று பொருள்படுத்தினுல் தம்மால் வியாக்கியை செய்யப்பட்ட சூதசங்கிதையை, ஞானயோககாண்டமும் யஞ்ஞவைபவ காண்டமும், சாற்றிய பாசுபதவிரதப் பொருளுக்கு மாறுபடுவர். சூதாசாரியருக்கிசைந்து அத்தியாசிரமம் என்னும் பதத்துக்கு பாசுபதவிரதம் என்று பொருள்செய்தால் பரமஹம்ஸ சந்நியாசி என்று பொருள்படுத்திய சங்கராசாரியரோடு மாறுபடுவர். அவ்விருதிறத்தாரையும் நோக்கி சுவேதாசுவதரோபநிடத தாத்பரியமுரைத்த பிரமகீதையிற்கண்ட அத்தியாசிரமம் என்னும் பதத்துக்கு யாதும் பொருள் கூறுது லேசாகவே எவரும் அதனைப் பாசுபதவிரதம்என்று அறிந்துகொள்வார் என்னுங் கருத்துடையார்போலப் பொதுவரவாளா அவ்விடத்துப் பொருள்செய்யாது விடுத்தார். சிலபுராணங்களிலே அத்தியாசிரமம் என்னும் பதம் பிரயோகிக்கப்படும் இடங்களிலெல்லாம் அதனை அச்சுக்காரரும் கையெழுத்துக்காரும் பிரமசரியம் கிரஹஸ்தம் வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்னும் நான்கனுள்ளே இறுதியிலுள்ள சந்நியாசத்தை உணர்ந்த அத்தியாசிரியமென்று பிழையுறமாற்றி எழுதி அச்சிட்டுவிடுகின்றுர்கள். வியாசர் முதலாயினோர் அத்தியாசிரமம் என்பதைப் பசுப்தவிரதத்துக்குப் பொருளாகின்றமையை அறியுமாற்றலில்லாத அவிவேகிகள் நினைத்தபிரகாரம் பிழையுறமாற்றுது என்செய்வார்! ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் அவர்கள் தமது ஸ்ரீநிவாஸீயம் எனப்படும் கைவல்யோபநிடத பாஷ்யத்திலே அத்தியாசிரமம் என்னும் பதம் பஸ்மோத்தூளண திரிபுண்டரங்களுக்குப் பெயராகவும், சந்நியாசிக்குப் பெயராகவும் வரைந்திருக்கின்றுர் அத்தியாசிரமம் என்பதற்குத்தமது ஆசாரியர் பரமஹம்ஸசந்நியாசி என்று எழுதி

பிழைபட்டார் என்று கண்டமைசிறிது தொனிக்க பரமஹம் சசந்நியாசியென்னும் பதத்தினின்று 'பரம' என்னும்பத த்தை நோக்கி சந்நியாசி என்று கூறியும், சூதசங்கிதைமுத லியவைகளிலே அத்தியாசிரமம் என்றும் கண்டிருக்கின்ருேம் எனக்காட்டினதற்கு[பாசுபதவிரதம்என்றுநேரேகூறாது]விபூ தி உத்தூளனம் என்று எழுதியும் விட்டார். பாசுபதவிரதம் என்பது பாசுபததீக்ஷையாய் பின் அது வைதிகசைவர்களா லே கொள்ளப்படும் சமய விசேஷ நிர்வாணதீக்ஷை கூறும் சைவாகமத்து ஞானவதியாய் கிரியாவதியாய் (அவுத்திரியாய்) முடிந்து, அதனுற்ரும் தாந்திரிகரெனக்கௌதமர் முதலிய ஷண்முனிவர் சாபமேற்ற விப்பிரரால் இழித்துரைக்கப்படு வோமென்று பயந்தோ, ஸ்ரீநிவாஸசாஸ்திரியாரவர்கள் தை த்திரீயத்திற்கண்ட விபூதிக்கும், முண்டகத்திற்கண்டசிரோ விரதத்துக்கும் கைவல்லிய சுவேதாசுவரத்திற் கண்ட அத் தியாசிரமத்துக்கும் வைதிகபாசுபத விரதமென்றேனும்வை திகபாசுபத தீக்ஷையென்றேனுஞ் சூதசங்கிதை லிங்கபுரா ணம் சனற்குமாரசங்கிதை சிவகீதை வாயுசங்கிதைகைலாய சங்கிதை முதலியவைகளிற்கண்ட கருத்தை முழுமையுந் தழுவாது தாம் நாடோறும் பாசுபத விரதானுஷ்டானமின் றிக்கன்மகாண்டம்பற்றி உபநயனகாலத்து காயத்திரி உபதே சத்தோடு சந்தியாதிகாலங்களிலே அக்னியாதி மந்திரங்கொ ண்டு சாதாரணமாகத் தரிக்கப்படும் விபூதி உத்தூளனமெ ன்று பிறரெல்லாம் நினைக்குமாறு வளரவரைந்து விட்டார். உபநயன சம்ஸ்காரமில்லாமல் விப்பிரர் வேதாத்தியயனத்து க்கு எவ்வாறு உரியராகாரோ அவ்வாறே (கிருஷ்ணர் இரா மர் முதலாயினேரால் அநுஷ்டிக்கப்பட்ட)பாசுபதானுஷ்டா னமின்றிச் சூதசங்கிதை முதலியவற்றின் பொருளை அறிவ தற்கு அருகரெல்லவென்பது அச்சூதசங்கிதையின் சிவம கான்மியகண்டத்து இரண்டாம் அத்தியாயத்தினலே அறி யப்படுகின்றது. ஆகவே சாஸ்திரியாரவர்கள் தாம் அத்யாசி ரமம் சிரோவிரதம் என்பவைகளுக்குப் பாசுபத விரதமென் றேனும் பாசுபத தீக்ஷையென்றேனும் வெளிப்படையாக எழுதினல் தமது சங்கராசாரியர் கொள்கைக்குத் தாம் மா றுபடுவோமென்றும் அதனல் தாந்திரிகரென்றும் மற்ற வை திகரால் தாழ்த்திக்கூறப்படுவோமென்றும் அஞ்சி, பொது வுறவிலாங்குபோல விபூதி உத்தூளனமென்றும் சந்நியாசி என்றும் மெதுவாய் வரைந்து நழுவப்பார்க்கின்ருர்' 'என் றதுவரை வரைந்து வீணில் பத்திரிகையை வ்யர்த்த மாக்கிய நேர்மை வெளியாயிற்று. இவ்வளவால் பல இலக்கங்களில் இவர் ஏதோ புராணங்களைப் பலபல வுதகரித்து வேதங்க ளில் காணப்படும் அத்யாச்சிரமபதம் அவைதிக காமிகாதி ஆகமங்களில் சொல்லப்படும் தீக்ஷையைக் குறிப்பதாம் எனச் சித்தாந்தப்படுத்தினதாகவும், அதற்குமாருக ஸ்ரீஜகத் குருஸ்வாமிகளும் மற்று ஸ்ரீவித்யாரண்யரும் ப்ரம்மவித்தி யாபத்திராதிபரும் எழுதினரென்றும் தம்முள் தாமேஅவர் களைக் கண்டித்ததாகவெண்ணி மயங்கினதை அறிஞர் அறி யாதொழியார். அவர் எடுத்த பிரமாண வசனங்களில் 1,2,3, இலக்கங்கள்கொண்ட சூதசங்கிதையும் 7,9, இலக்கம்கொண் டபிரம்மோத்திரகாண்டம் வாயுசங்கிதைகளும் இவருக்கு முற்றும் விரோதமான பொருள் கொடுப்பனவென்பதை அவ் வசன பரிசிலனத்தே நிரூபித்திட்டாம். ஆதலால் அதேவச னவலிகொண்டு மீண்டும் இவர் விவரித்தது மீளா அபக்யாதி க்கே ஏதுவாயதாம் என்க. மேலும் இவ்வத்யாச்சிரமச்சொ ல்லால் பெரும்பான்மையில் ஆன்ருேர்வழங்குவது சுவேதா சுவதரவுபநிடதத்தையே ஆசிரியர் அப்பய தீக்ஷிதர் அவர் களாதியனேக பெரியோர்களும் அத்யாச்சிரமோபநிடதம் என்று அதையே வழங்கிவருகிருர்கள். அதில் கண்டஅத் யாச்சிரமபதம் ஸந்நியாஸமாம் என்று கூர்மபுராணத்துள்ள சுசிலோபாக்யானுதி பிரமாணங்களால் நிரூபித்தோம். அதே புராணம், வேதங்களும் வேதாங்கங்களும் அன்றி மற்ற வை என்றும் வைதிகர்க்குரியனவல்லவென்றே நிர்மானித்தும், பாசுபத பாஞ்சராத்திரங்களைத் தூஷித்துமிருக்க, அதுவே அவைதிகதீக்ஷையைக்குறித்ததாக இவர் கண்ட கனவைமா ற்றிடுவோம். கூர்மபுராணத்தில் முதலாவதுஅத்தியாயம்: ஸாங் கியபாவனை யோகபாவனை அத்யாச்சிரமபாவனை இவைகளி ல்ஏதேனும் ஒன்று அவசியம் என்றும், அவற்றுள் இறுதியி லுள்ள அத்தியாச்சிரமபாவனை ஸந்நியாஸிகளுக்கே யுரியது என்றும், அதுவேதத்தில்தான் சித்திப்பது என்றும், நிரூபி க்கப்பட்டது. விரிவுமற்ருேரிடம். 2-ம் அத்தியாயத்தில் ப்ரம் மதேவன் மோகினிக்குத்திரவுகொடுக்கும் பிரகரணத்தில்:—

(க) 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌰𑌤𑌾 𑌦𑌾𑌨𑍍𑌤𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌿𑌷𑍍𑌠𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 । [illegible] 𑌤𑌃 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑍍𑌯॥

(உ) [illegible] । [illegible] 𑌤𑌃 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑍍𑌯॥

(௩) 𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂 [illegible] । [illegible] 𑌤𑌃 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑍍𑌯॥

(௪) [illegible] । [illegible] 𑌵𑌰𑍍𑌜𑍍𑌯॥

(௫) [illegible] । [illegible] 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑍍𑌯॥

(1) ஞானயோகத்தில் பற்றுள்ளவர்களாய் புலனடக் கமுள்ளவராய் எப்பொழுதும் பிரம்மநிஷ்டைகூடி பிரம்ம

விசாரம்செய்து கோபம்முதலிய சத்துருக்களை ஒழித்து ஸத்யநிஷ்டையுள்ள பெரியோரைத் தூரத்தில் விட்டோடு.

(2) தியானயோகிகளும் பற்றற்றவரும் சாந்தியுடையோரும் தர்மம்செய்வோரும் வேதங்களைக்கற்றுணர்ந்தோரும் யாகம்செய்வோரும் தவமியற்றுவோருமான விப்பிரரைத் தூரத்தில் ஒழித்திடு.

(3) வேதங்களையும் வேதாங்கங்களையும் விசாரித்து அதனாலே எல்லாச்சம்சயங்களும் தீர்ந்த பெற்றவரையும் மகாயாகம்செய்யும் விப்பிரரையும் தூரத்தில் விடு.

(4) ஜபம் ஹோமம் வேதாத்யயனம் யாகம் இவற்றால் சர்வேசுரனானமகாதேவனை எவர் யஜிக்கின்றனர், அவரிடம் யத்தனத்துடன் அணுகாது ஓடியொளித்திடு.

(5) பிரணவத்யானிகள், ருத்திரஜபம்செய்வார், அதர்வசிரஸை அறிந்தவர், தருமஞ்ஞர் இவரைவிடவேண்டும் என்று ஸ்பஷ்டமாய் வேதாத்யயனம் வேதாந்தவிசாரம் ப்ரம்மவிசாரம் ருத்திரஜபம் இவைகளைச் செய்வோரிடம் மோகமணுகாதெனக் குறிக்கப்பட்டதன்றி தந்திரதீக்ஷைகளாவது தாந்திரிகராவது ஸ்மரிக்கப்படவுமில்லை. அத்துடன் நில்லாது உடனே வேதஸ்ருஷ்டியையும் வருணாச்சிரம ஸ்ருஷ்டியையும் நிருபித்தபிறகு

(க) அநாதிநிதநாநித்யா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா। ஆதௌவேதமயீதிவ்யா யத:ஸர்வா:ப்ரவ்ருத்தய:॥

(உ) அதோந்யாநிஹிஶாஸ்த்ராணி ப்ருதிவ்யாம் யாநிகாநிசி। நதேஷுரமதேதீர: பாஷண்டீதேநஜாயதே॥

(ங) வேதார்த்தவித்தமை:கார்யம் யத்ஸ்ம்ருதம் முநிபி:புரா। ஸஜ்ஞேய:பரமோதர்மோ நாந்யஶாஸ்த்ரேஷுஸம்ஸ்தித:॥

யாவேதபாஹ்யாஸ்ஸ்ம்ருதயோ யாஶ்சகாஶ்சகுத்ருஷ்டய:। ஸர்வாஸ்தாநிஷ்பலா:ப்ரேத்ய தமோநிஷ்டாஹிதா:ஸ்ம்ருதா:॥

(1) ஆதியந்தமில்லாத நித்யதிவ்ய வாக்கானது பிரம்மதேவன் திருமுகத்தில் தோன்ற, அதுவே ஆதியில் வேதங்கள் எனப்பட்டது. அதனிடத்தே அனேக பிரவிருத்திகள் தோன்றின.

(2) அதினும்வேறான சாஸ்திரங்கள் உலகத்தில் பலவுளவெனும் அவற்றில் அறிவுள்ளவன் அன்புவைத்திடான், அவற்றில் பற்றுள்ளவன் பாஷண்டியாவான்.

(3) வேதார்த்தங்களைக் கற்றுணர்ந்த மகரிஷிகளால் எந்தக்கன்மம் செயற்பாலதென முன்னர் சொல்லப்பட்டது, அதைப்பரமதருமம் என்று அறியவேண்டும். வேறு சாஸ்திரங்களில் உள்ளது அவ்விதம் பரமதர்மமாகாது.

(4) 'எவை வேதபாஹ்யங்களான ஸ்மிருதிகள், எவை குஸிருஷ்டிகள், அவைகள் எல்லாம் நிஷ்பலங்கள். தமோமயங்கள் என்றே அவற்றை ரிஷிகள் சொல்லுவார்' என்று ஸ்பஷ்டமாய் வேதங்களும், வேதாநுசாரி சாஸ்திரங்களான ஸ்மிருதிகள் முதலியவைகளும், அன்றி மற்றவை தமோமயசாஸ்திரங்கள் எனவும், அவற்றைப் படிப்பவன் அவற்றுள் நம்பிக்கைவைப்பவன் எவனும் பாஷண்டியாவான் என்றும், வேதபாஹ்யாகமாதி நிந்தையே வேதஸ்தோத்திரவ்யாஜமாய் சொல்லப்பட்டது. மேலும் அடுத்த மூன்றாம் அத்தியாயத்தில் ஆசிரமதருமங்களைச் சொல்லுமிடம், ஸந்நியாஸிகளை, ஸ்பஷ்டமாய் யோகிகளை யோகியென்று.

(ரு) (க) யஸ்தாத்ரைவஸ்யாஸ் நித்யத்ருப்தோ ஜிதேந்த்ரிய:। ஸஞ்சைஷநஸம்வஸ: ஸயோகீபிக்ஷுருச்யதே॥ என்ற சுலோகத்தால் நிருபித்து அவர் மூவகைப்பட்டவர் என்று

யோகீசத்ரிவிதோஜ்ஞேய:பௌதிகஸ்ஸாங்க்யஏவச। த்ருதீயோத்யாஶ்ரமீப்ரோக்த:யோகமூர்த்திமாஸ்ரித:

அந்தயோகி மூவகைப்படுவோன்:—பௌதிகன், ஸாங்கியன் மூன்றாவது உத்தமயோகத்தைப்பற்றிய அத்யாச்சிரமி எனறபொருளை நிருபித்தது. இதனால் இதுவரையில் இவர் வீண்பிடிவாதமாய் தம்மவர் மயங்கச் சில விருதாவாதம் செய்தபடி ஏற்பட்டதாய் நினைத்திருந்த அத்யாச்சிரமம் தாரிதமான அவைதிகாகமதீக்ஷை அடிசாய்ந்து நிலைதடுமாறி முறிந்துதுமன்றி, ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகளாதி மூதறிஞர்கொண்ட நல்வழிப்படி உத்தமஸந்யாஸி வாசகமே என்று நிலைநிறுத்தப்பட்டது. இதனால் ஸ்ரீ கைவல்யம் சுவேதாசுவதரம் முதலிய உபநிடதங்களில் 'காய்ந்தவனுக்கு கஞ்சிவரதப்பா? என்றசொற்கேட்டதுபோல இவர்கண்டு பாய்ந்து பரிந்து ஓடிப்பிடிக்கும் அத்யாச்சிரமச்சொல் இவர்கைக்கொண்ட ஆகமங்களில் நிந்திக்கப்பட்ட சுத்தவைதிகபரமஹம்ஸாசிரமத்தையே குறித்ததென வேதோபம்பிருங்கண விஜயபேரி யடித்துத் தாபிக்கப்பட்டது. அந்தோ! இப்படிக்கு வெள்ளிடைமலை போல் விளங்கக்கிடைக்கும் வேதோப பிருங்கணத்தினமான கூர்மபுராணம் அங்

தோ: யாதுகாலவிபரீதம்! வேதபாஹ்யங்களான தந்திரங்களே யும் தந்திரதிக்ஷையையும் அத்தியாச்சிரமம் என்று சொல்லியதே மெல்லிய வைரக்கல் மணியாய வைதிகசித்தாந்தத்தின் உள்ளே, அந்தோ! இவர்பேதமைக்கென்செய்வோம்! ஓர் பழையசிறியநூலை நுழைக்கநினைக்கின்றார். அறிஞர்காள்! ‘நல்லமாட்டுக் கொருசூடு நல்லபெண்டாட்டிக் கொருவார்த்தை’ என்றபழமொழியை யனுசரித்து ஒருவாறு அப்புராணரத்தினத்தில் இவ்வளவு எடுத்துக்காட்டியதே அதனியல். சுத்தவைதிகமேயன்றி சிறிதும் தாந்திரிக மாகாதென நிரூபிக்க உண்மை யறியவிரும்பும் வாதிகளுக்குப் போதுமானது. இவ்விதண்டா பண்டித பாஷண்ட வாதிகளுக்கு இனியும் ஸ்பஷ்டதரங்களான வசனங்களால் இதே புராணம் வேதவைதிகங்களைப் புகழ்ந்த நேர்மையையும் தந்திரதாந்திரிக நிராகரண கூர்மையையும், சிவாத்துவதிச் செல்வம் நிறைந்த எல்லா வைதிகர்களும் அறிந்து களிப்புறுமாறு முறையே நிரூபிப்போம்.

இன்னும் வரும்.

அத்வைதவிளக்கம்.

முன்தொடர்ச்சி.

அவ்வாறின்றிச் சரியாபாத முதலியவற்றிற் பேசாது ஞானபாதமான

சிவஞானபோதம் முதற்சூத்திரத்தில்

‘சங்கார காரணனு யுள்ள முதலையே முதலாக வுடைத்து இவ்வுலகம்.’

என்றும்,

ஷை இரண்டாஞ்சூத்திரத்தில்

‘புனருற் பவம் வருமா றுணர்த்துத னுதலிற்று’

என்றும்,

ஷை மூன்றாஞ்சூத்திரத்தில்

‘ஆன்மப் பிரகாசமுணர்த்துத னுதலிற்று’

என்றும்,

ஷை நான்காஞ்சூத்திரத்தில்

‘ஆன்மா அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரம் சித்தமென்னு நான்கனுள் ஒன்றன்றாயினும் நண்ணுணர்வின்மையிற் சூழ்ச்சித்துணைவராகிய அமைச்சரோடு கூடி நின்று தன்றொழி னடாத்தும் அரசன்போல’

என்றும்,

ஷை ஐந்தாவது சூத்திரத்தில்

‘இவ்வான்மாக்க ளிடத்துத் தமது முதல் (கடவுள் உபகார முணர்த்துதனுதலிற்று’

என்றும்,

ஷை ஆறாஞ்சூத்திரத்தில்

‘சத்தும் அசத்தும் வரைசெய் துணர்த்துதனுதலிற்று’

என்றும்,

உரைகாரர் கூறியதேனோ? ஷை சிவஞானபோதம் ஆறும் சூத்திரத்தில் ‘உணருரு அசத்து, உணராது இன்மை’ என்று கூறியதை நித்தியாநித்தியவஸ்து விவேகமென்றுணராமல் போனதினாற்றான் பூர்வபட்சியார் பெரிதும் மயங்கிப் பேசலானார் பாவம்! நித்தியாநித்திய வஸ்து விவேக முதலிய சாதன சதுஷ்டய முற்ற பின்னரே சரியையாதிகள் உண்டாவதாயின், நித்தியப் பொருளையும் அநித்தியப் பொருளையும் ஞானபாதத்திற் கூறாமல் இருக்கவேண்டும். (கூறியிருப்பின் இவர் கூற்றின்படி ‘நின்று பயனின்மை’ என்னும் குற்றத்திற்கிடனாம்.) இருந்தாலும்

‘உணருரு அசத்தெனின் உணராதின்மையின்’

என்றும்,

‘யாவையுஞ்சூனியஞ்சத்தெதிராகலின்
சத்தேயறியாதசத்திலது’

என்றும்,

‘ஊராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவ’

என்றும்,

உள்ள சூத்திரங்களும் இவைபோன்ற விஷயங்களமைந்த சூத்திரங்களும் அந்த ஞானபாதத்தில் இல்லாமல் இருக்கவேண்டும். அவ்வாறின்றி நித்தியாநித்ய வஸ்து விவேக முதலியவைகளைப் பற்றிய விஷயம் ஞானபாதத்திலேயே இருப்பதானும் சரியாபாத முதலியவைகளில் இல்லாமையானும் சரியை முதலிய பகிர்முக கர்மங்கள் முதிர்ந்த பிறகே நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகபரபோக விராகம், சமாதி சட்க சம்பத்தி, முமுட்சுவத்துவம் என்னும் சாதன சதுஷ்டய முண்டாமென்றும், அதின் பிறகே ஞானஞ்சித்திக்குமென்றும் பெற்றாமென்க. சாதனசதுஷ்டயம் சரியையாதிகளுக்கு மேற்பட்டதினாலன்றோ

கூர்மபுராணம் ஈசுவரகீதை யோக அத்தியாயம்.

‘கருத்திலாமூடர் காட்டமாதிகளிற் காண்பர்’

என்று கூறிற்று? ஈண்டுக் ‘கருத்து’ என்பதுசாதனசதுஷ்டயமன்றோ? இதன்பிறகு ‘சாதனசதுஷ்டயத்தினளவை யாமளந்து காட்டியதால் நீர் வருந்திய தெற்றிற்கு? அதற்கும் உமது விவர்த்த முடிவுக்கும் ஒரு சம்பந்தமுமில்லையே’ என்றார். எந்த உபநிஷத்துச் ‘சாதன சதுஷ்டயமாகிய நித்தியாநித்திய வஸ்து விவேக முதலியவைகள் முமுட்சுவால் அடையத்தக்கனவே; அதுவே மோட்ச முயற்சி’ என்று கூறிற்றோ, அந்த வராகோபநிஷத்தே

-வது அத்தியாயத்தில்

'தம்முடைய வருணாசிரம தருமத்தினாலும் தபசினாலும் குருவைச் சந்தோஷப் படுத்துவதினாலும் புருஷர்களுக்கு வைராக்கிய முதலிய சாதன சதுஷ்டய முண்டாகின்றது'

என்று சாதன சதுஷ்டய முண்டாவதற்கு ஏது கூறி,

மூன்றாவது அத்தியாயத்தில்

'ஜகத்திற்கு விவர்த்தோபாதான காரணமாயுமிருக்கிறதெதுவோ, அந்தச் சித் நான் என்று ஆசிரியஞ்செய்'

என்று அப்பியாசமும், பின்னர்க் 'கிளிஞ்சலில் வெள்ளி எப்படிக் (அக்கியானத்தினால்) கற்பிக்கப்பட்டிருக்கிறதோ, அப்படியே, என்னிடத்திலேயே மாயாமயமான ஜகத்தானது மாயையினாலே கற்பிக்கப்பட்டிருக்கிறது'

என்ற அனுபவமுங் கூறினமையின், சாதன சதுஷ்டயத்திற்கும், விவர்த்த முடிவுக்கும் சம்பந்தம் உளதெனப் பெறும். ஆகலின் பிரமாணமின்றிக் குளறுபடையாக 'அதற்கும் உமது விவர்த்தமுடிவுக்கும் ஒரு சம்பந்தமுமில்லையே' என்று இப்பூர்வபட்சி கூறிய கூற்று வைதிகக் கூற்றிற்கு மாறுபடுதலின், இவருரை அவைதிகவுரையென விடுத்தாமென்க.

'உமது மாயாவாத குரு (வித்தியாரண்யர்) ஞானிகளுக்குச் சகல இச்சையுமுண்டாயிருக்கலாமென்று பஞ்சதசப் பிரகரணத்தில் சொல்லியிருப்பதால், மிச்சாவாதிகளாகிய நும்மதத்தினர் சாதன சதுஷ்டயங்களைத் தழுவவேண்டுவது அநாவசியகமாம்'

என்றார். இவ்வாறு அரதத்த ரென்னும் ஓர் வேதபாகிய தாந்திரிகர் பேசி, அத்வைதி யென்பவரால் மறுக்கப்பட்டு வாளா போனார். அம்மறுப்புப் 'பஞ்சதசப் பிரகரணபாச விளக்கச் சண்டமாருதம்' என்னும் பெரிய நூலின் 23, 24, 25, 26-வது பக்கங்களில் இருத்தலின் அதுபற்றி இங்கு யாதும் பேசாதுவிட்டாமென்க. யார் மாயாவாதி? என்றவிஷயமாய் இந்து என்பவர்க்கும் சோ. நாயகருக்கும் வாதம் நடந்து, அதில் சோ. நாயகர் தோல்வியடைந்து, அதனால் தாம் மாயாவாதியாய் நின்றமையையும், இதுவிஷயமாய் ஆரியன் என்பவரும் ம-ா-ா ஸ்ரீ செந்திநாதையரும் வாதம்புரிந்து செந்திநாதையர் அபஜயப்பட்டு வாளா சென்றமையையும் இவர் அறியாதுபோலப் பகட்டுத்தனஞ் செய்து, பின்னும் அத்வைதிகளை மாயாவாதிகளென்கிறார். இனியேனும் தயைபுரிந்து 'துவித சைவரே மாயாவாதிகள்' 'துவிதசைவமறுப்பு' இவ்விரண்டு நூல்களையும், 'மாயாவாத சைவசண்டமாருதம்' அவைதிக சைவசண்டமாருதம்' என்ற இரண்டு நூல்களையும் வாசித்துப் பார்த்து, நியாயத்தைக் கடைபிடித் தொழுகுவாராக. நியாயத்தைக் கடந்து துன்மார்க்கத்தனமாய் வீண் வாதம் புரியாதிருப்பாராக.

'அத்வைத ஞானத்திற்குச் சாதன சதுஷ்டயம் உபகாரமென்று பெறப்பட்டதில்லை. அன்றியும், நித்தியாநித்திய வஸ்து விவேகத்தினாலே அகம் பிரமஞானம் சித்திக்க வேண்டுமென்றும் பெறப்பட்டதில்லை. பிரமத்தையறிவதற்கும் மனோவியாபார மில்லாமலிருக்கிற மோக்ஷநிலை எய்துதற்கும் சாதன சதுஷ்டயம் உபகாரமென்று கூறுவது எம்மதத்துக்கும் ஒப்பே. உமக்குத்தான் அது சொந்தம் போல (இல்டு வியாபாரஞ் செய்யும்) நீர் தடுமாறுவது கேவலம் அசப்பியக் சண்டை.'

என்றார். திரிபுடியற்ற அத்வைதஞானத்திற்குத் தான் சாதன சதுஷ்டயம் அத்தியந்த வுபகாரமா யுள்ளதென்று மேலெழுதிய விஷயத்தாலும், பிரமவாதியார் 'அத்வைத தூஷண நிக்கிரகம்' 4-ம் பக்கத்திற்காட்டிய

சாதனமாகும்சதுட்டயங்கள்சமைந்தஅத்தன்மையோர்க்கு
நீதியாகஅருமறைதானின்றேயிவர்களறியும்வணம்
பூதமாயும்புவனங்கள்பிறவுமாகியிருந்ததுவும்
ஏதமில்லாதொன்றாயபரமேயென்றேயியம்பினதால். (௭௭)

என்றுள்ள பிரமகீதை சாந்தோக்கிய வுபநிடதச் செய்யுளானும் கொள்ளக்கிடத்தலின் அவைதிக துவித தாந்திரிகர்கட்கும் சாதன சதுஷ்டயத்திற்கும் யாதுஞ் சம்பந்த மின்றாமென்க. இன்றாக, சம்பந்த முளதுபோல் பேசுதல் அயலாள் நாயகனைத் தன்னாயகனென் றலமரும் மகளிர் கூற்றிற் கினமென்று விடுக்க. நித்தியாநித்திய வஸ்து விவேகத்தினாற்றான் அகம் பிரமஞானஞ் சித்திக்குமன்றி, அதற்குக் கீழிட்ட மற்றொன்றினாலும் சித்திக்காது. நித்தியவஸ்து விவேகத்தினால் அகம் பிரமஞானம் எவ்வாறு சித்திக்குமெனின், அதத்துவா விருத்தி லட்சணையின்படி (நேதி நேதி வாக்கியத்தால், யதார்த்த விசாரஞ் செய்யுங்கால்,

சூதசங்கிதை நித்தியவஸ்து விசாரம்.

'சுத்தமாய் நிரஞ்சனமா யவிகார மாயொளிர்சிற் சொரூபமேயாய், உத்தமமாய்ச் சருவசான் றாய்விளங்கு பரமசிவ மொன்றே யென்றும், எத்தகையோ ரும்புகழும் நித்தியவஸ்து உயர்மறையு மிவ்வாறேதும், ஒத்தசட மநித்தியமல் லாதுசித்துக் கநித்தியம்வக் தறுதலின்றே.' (௨)

கூர்மபுராணம் சாங்கியயோகம்.

'ஆதலால் பிரமமொன்றே நித்தியம்.' (௨௫)

என்ற பிரமாணப்படி பிரமந்தான் நித்தியமென்றும், அநித்திய வஸ்துவிவேகத்தினால்

சூதசங்கிதை அநித்தியவஸ்துவிசாரம்.

'ஆன்மா (பிரமம்) வல்லாத ஜடவஸ்துக்களான கடாதிகளாராயின், மான்மாறவுயர்தவத்தீர் அநித்தியமே யாயிருக்கும்.' (௬)

'ஒப்போதற்கரிய பிராற்கயல் யாவும் அநித்தியம்.' (௬௫)

பிரஸ்தாபித்து 'சாய்வற வடையுமன்னுன் சாலோக முத லோர் மூன்ரு, லேயமற் றிவைதா முன்ன ரியம்பியதி னும் விசேடம்' என்று கூறி அதனினும் விசேடமான சாரூபமுத்தி சதாசிவ மூர்த்தியினதென்பது தோன்ற 'நாடுறு சதாசிவப்பேர் நாட்டுசாரூபமுத்தி, நீடுறுமெவற்றி னுக்கு நிரம்பிய விசேடமாகும்' என்று முடிவுரைத்தா ராயினும், இவையெல்லாம் பூர்வபட்சமேயாம். இந்த முத் திகளில் சாயுச்சியஞ் சேர்ந்து முடிவுகட்டியதின்று' என்று பூர்வபக்ஷியார் கூறியதற்குப் பதில் வருமாறு:—

இன்னும் வரும்,

வைதிகசந்திரமௌலி

மகாபாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்.

முன்தொடர்ச்சி

இவ்வளவாற்ருனே இவ்வையர் அத்யாச்சிரமத்தைத் தன்புறப்படுத்த எடுத்துக்கொண்ட சிரமம் அதியானசிரம மாக முடிந்ததன்ருே? மேலும் அப்புராணம் இவருக்கு முற்றும் விரோதம். பாருங்கள்! அப்புராணம் ஒன்ப தாம் அத்தியாயத்தில்—

௪ (க) ப்ருஹ்மாணம் விதுபெபவம்வடும் ஹவஜ்ஞம் யஸ்ஸ நாதந:|

(உ) கயவடுஸிரஸா தெவம் தூஷ்டாவவ க்ரு தாஞ்ஜலி:|

(ங) வஷ நாராயணொऽநஞொஹெவெவர ஶாதந:|

(ச) ஹவாநெஸ்ஹெஷஹம் வஸ்ஷயெடுர ஹவாநுர த்ருஹம்ஷிநம்|

(ரு) ஹவாநுவ்ருக்ரு திரவ்யுக்த ஶஹம்வாரூஷ வவவ|

(சு) யொஹம் ஸநிக்ஷஜொதெவ: ஸொவிநா ராயண: வ்ரஹா:|

(எ) வநீஹாவெநவஶ்யம்தி யொமிநொஞ்வ்ருஹவாஷிந:|

(அ) க்வாஶநாஶ்ரு த்விஶ்வாத்த ஞயொமீஶாஶ வெஷ்யதி|

IV. (1) 'எந்த அனுதிசிவன் பிரம்மதேவனுகிய உம்மை முதலில் சிருஷ்டித்தான்.

(2) இருகைகள் கூப்பி அதர்வசிரஸால் தேவன் தோத்திரம்செய்தான்.

(3) இவ்வனந்த நாராயணன் எனது மூர்த்திபேதமே.

(4) நீர் சந்திரன், யான் சூரியன், நீர் இரவு, யான் பகல்.

(5) நீர் பிரகிருதி என்பமேம் அவ்வியக்தம், யான் புருடனும்.

(6) நிஷ்களதேவனுன யான் யாவனே, அவனே பிரபுவான நாராயணன் நீர்.

(7) பிரம்மநிஷ்டரான யோகிகள் ஏகீபாவமாகவே காண்பார்,

(8) ஓ விசுவாத்தும! 'உன்னை அடைந்திடாது என் னையடையமாட்டான்' என்றற்றெருடக்கத்தனவான வசன ங்கள் காணப்படுகின்றன.

இவற்றுள் இவர்கொண்ட ஆகமசித்தாந்தம் விருத்தமா னதே. சிவஸிருஷ்டியில் ஆதியில் பிரம்மன் பிறந்தது. இதுமுதல் வசனம். இரண்டாவது தேவனருட்பெறவேண்டி எந்தவிடத்தும் சொல்வதுபோல இங்கும் உபநிடதத்தால் தோத்திரம் சொல்லப்பட்டதே; மற்று ஆகமாதிப் பிரஸ் தாபமே இல்லை. ங. ச. ரு. சு. சிவநாராயண மூர்த்தி களைச் சிவசக்திகளாகச் சொற்றன. அதுவும் இவர் சித் தாந்தவிருத்தம். மற்று எ-ம்வசனம் ஏகீபாவதர்சனத்தைப் புகழ்ந்தது. இது மிகவும் பெரிய சைவசித்தாந்த காலா க்னி. அ-ல் விஷ்ணுவின் வழிபாடு. இவ்வழிபாட்டின் ஏது எனச்சொல்லப்பட்டது இச்சேதாத்பரியம். ஸ்ரீ சதுர் வேத தாத்பரிய சங்கிரகத்தில் ஸ்ரீ சுதர்சனுசாரியமூர்த்தி களால் நாராயணேபநிஷத் விசாரத்தில் ஒப்பப்பட்டது, அது ஆகமசித்தாந்திகளுக்குக் கண்டத்துட் புண்ணும். இம் மட்டோ! கஉ-ம் அத்தியாயம் செய்யும் கோலாஹலம் இவர் சித்தாந்த தூலமலைக்குப் பிரளயகால ஜஞ்சாமாருத மாம் டாருங்கள்

௫ (க) யஸ்யாநெநநகஸ்டுயொமெந ஹக்ஸ்ராஜ்ஞாநெந நவெவஹி| வ்ராவ்யாஹஷெமிவிஶ்ருஷ நாந்யாகஸ்டுகொடிஹி:||

(உ) ஶ்ருதிஸ்ம்ருதிதம் ஸத்க்ஸ்டுவணர்ஶ்ரு ஶாஷிதம்| கஸ்யாத்ஜ்ஞாநஸஹிதம் ஶக்தபெஸதம் கரா||

(ங) யஶ்டாஸ்தம் ஜாயதெஹக்தி: ஹக்த்யாஸம் வ்ரா வ்யதெவர| ஶ்ருதிஸ்ம்ருதிஹ்யாஶஷிதெ யஶூர யஜ்ஞாஷிகொஶத:||

(ச) நாந்யதா ஜாயதெயஶூர வெஷாஸ ஶூரஷிநிபடுஹெள| தஸ்ரநாஶக்ஷாயடுஶ்டா யீடு ஶஹ்ரவம்வெஷஶாஶ்ருயெக||

(ரு) ஶவெஶவெஷாவராஶக்தி வெடுஷஸம்ஜ்ஞா வரதநீ| ஜஹ்ஜஸ்ஹாஶஷவெண ஸமடுரதெள ஸம்ப்ருவதடுதெ|

(௬) தேஷாமேவ ச ரக்ஷார்த்தம் வேதாநாம் பகவாநஜ:| ப்ராஹ்மணாதீந்ஸஸர்ஜாத ஸ்வே ஸ்வே கர்மண்யயோஜயத்||

(௭) யே ந குர்வந்தி தத்தர்மம் ததர்த்தம் ப்ரஹ்ம நிர்மிதம்| தேஷாமதஸ்தாந்நரகாந் தாமிஸ்ராதீநகல்பயத்||

(௮) ந வேதாத்ருதே கிஞ்சித் ஶாஸ்த்ரம் தர்மாபிதாயகம்| யோ(அ)ந்யத்ர ரமதே ஸோ(அ)ஸௌ ந ஸம்பாஷ்யோ த்விஜாதிபி:||

(௯) யாநி ஶாஸ்த்ராணி த்ருஶ்யந்தே லோகே(அ)ஸ்மிந் விவிதாநி ச| ஶ்ருதிஸ்ம்ருதிவிருத்தாநி நிஷ்டா தேஷாம் ஹி தாமஸீ||

(௰) காபாலம் கௌலகம் சைவ யாமலம் வாமமார்ஹதம்| காபாலிகம் பாஞ்சராத்ரம் ச பௌத்தம் மோஹநார்த்தகம்||

(௧௧) ஏவம்விதாநி சாந்யாநி மோஹநார்த்தாநி தாநி து| யே குஶாஸ்த்ராபியோகேந மோஹயந்தீஹ மாநவாந்||

(௧௨) மயா ஸ்ருஷ்டாநி ஶாஸ்த்ராணி மோஹாயைஷாம் பவார்ணவே|

(௧௩) வேதார்த்தவித்தமை: கார்யம் யத்ஸ்ம்ருதம் கர்ம வைதிகம்| தத்ப்ரயத்நேந குர்வந்தி மத்ப்ரியாஸ்தே ஹி யே நரா:||

(௧௪) வர்ணாநாமநுகம்பார்த்தம் மந்நியோகாத்விராட்ப்ரபு:| ஸ்வாயம்புவோ மநுர்தர்மாந் முநீநாம் பூர்வமுக்தவாந்||

(௧௫) ஶ்ருத்வா தாந்யே(அ)பி முநயஸ்தந்முகாத்தர்மமுத்தமம்| சக்ரு: ஸ்வஸ்வமதேநைவ ஸ்ம்ருதிஶாஸ்த்ராணி சைவ ஹி||

(௧௬) தேஷாம் வாக்யாநி தத்ஸர்வம் யதார்த்தமேவ மஹர்ஷய:| ப்ராஹ்மணாதயஸ்தாநி கார்யம் க்ருத்யம் ப்ரயோஜயேத்||

(௧௭) க்ஷத்ராதிவர்ணாநாம் த்ர்யாவேதநகாதி தாநி ச| யாமேயாமேவஸ்வேஷாம் கர்தவ்யம் ஶாஸ்த்ரவித்||

(௧௮) ஶிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம் சந்த ஏவ ச| ஜ்யோதிஶ்ஶாஸ்த்ரம் ந்யாயவித்யா ஸர்வேஷாமுபப்ரும்ஹணம்||

(௧௯) ஏவம் சதுர்தஶைதாநி யதா ஹி த்விஜஸத்தமை:| சதுர்வேதைஸ்ஸஹோக்தாநி தர்மோ நாந்யத்ர வித்யதே||

(௨௰) ஏவம் வேதாத்மகம் யஜ்ஞம் தநாவ்யாஸாதய: பரம்| ஸர்வம் பிந்நாதேஶா த்ர்யாவதார்த்தம் ஸம்பவம்||

(௨௧) ப்ராஹ்மணாஸ்ஸமதேஸ்யைவ ஸம்ப்ராப்ய வேதம் ப்ரதிஸம்சரேத்| வரஸ்யாங்கத்ரதாதாந: ப்ரவிஶம் ஶிவரம் வதேத்||

(௨௨) தஸ்மாத்ஸர்வப்ரயத்நேந யத்நார்த்தம் வேதமாஶ்ரயேத்| யதேணவஹிதம் ஜ்ஞாநம் பரம் ப்ரஹ்ம ப்ரகாஶயேத்||

V (1) தியானத்தாலும் கன்மயோகத்தாலும் பத்தியாலும் ஞானத்தாலும் அப்பரம்பொருள் அடையப்படுமேயன்றி ஓ மலமன்னவ! வேறெவ்வகைக்கன்மகோடிகளாலும் கூடாது.

(2) கன்மமெனப்படுவது வேதங்களிலும் தருமசாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டது; அது வருணாச்சிரமங்களுடன் கூடியது; ஆத்துமஞானத்துடன் கூடிய அதை முக்திக்காக எப்பொழுதும் அனுட்டித்துவா.

(3) தர்மத்தால் பத்தியுண்டாம்; பத்தியால் பரத்தைப்பெறலாம்; தருமமென்பதும் வேதங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும் உள்ள யாகாதிகளே என்பது பெரியோர்கொள்கை.

(4) மற்றது தருமமாகாது; வேதத்திடத்தேதான் தருமம் தோன்றியது, ஆதலால் மோக்ஷஹேதுவான தருமத்தைக்கருதுபவன் எனது சொரூபமான வேதத்தையே ஆச்சிரயிக்கவேண்டும்.

(5) எனது பரசக்தி தானே வேதமென ஸிருஷ்டிமுதலில் பெயர்பெற்று, ருக்கு யஜுஸ்ஸு ஸாமம் என்ற வேற்றுமைகளுடன் வெளிவந்தது.

(6) அவ்வேதங்களைக் காப்பதற்பொருட்டே ஸிருஷ்டியாதியில் பிரம்மதேவன் பிராம்மணாதி நான்குவருணங்களையும் சிருஷ்டித்து அவரவர்தொழிலில் நியமித்தார்.

(7) அந்த வேதங்களில் அவ்வவ்வருணங்களுக்கென அவரால் விதிக்கப்பட்டதாகக் காணப்படும் தர்மங்களை அனுஷ்டிக்காதார்க்கெனவே கீழுலகங்களான அந்ததாமிஸ்ராதி நரகங்களை அமைத்தார்.

(8) வேதங்களைத்தவிர வேறொரு சாஸ்திரம் தருமங்களை நிருபிப்பதல்ல; வேதங்களைவிட்டு மற்றவைகளில் எவன் சிரமம்செய்கிறானோ அவனுடன் துவிஜர்கள் பேசவும்கூடாது.

(9) இந்த உலகத்தில் எந்த சாஸ்திரங்கள் சுருதி ஸ்மிருதிவிருத்தங்களாகக் காணப்படுகின்றனவோ அவைகள் எல்லாம் தமோநிஷ்டையைக் கொடுப்பது.

(10) காபாலம், பைரவம், யாமளம், வாமம், ஆர்ஹதம், காபிலம், பாஞ்சராத்திரம், டாமரம், மோகனம் (இவைவாம்)

(11) எவர் குற்சிதசாஸ்திரபலத்தால் மனிதரை மோகிக்கச்செய்வார் அவர்கொண்ட மோகனசாஸ்திரங்களான மற்றவைகளும்.

(12) முன்னொருகாலத்தில் உலகம் மயங்கவேண்டியே என்னால் இந்த தந்திரங்கள் வெளியிடப்பட்டன.

(13) வேதார்த்தங்களைக் கற்றுணர்ந்த மகரிஷிகளால் எந்தக்கன்மம் வைதிகம் என நிரூபிக்கப்பட்டதோ அதை முறைவழாது அனுஷ்டிப்பவர் எவரோ அவரே எமக்குப் பிரியமானவர்.

(14) வருணாசிரமங்களை ரக்ஷிக்கவேண்டியே எனதாணைபெற்று விராட்புருடன்தானே சுவாயம்புவமனுவாய் அவதரித்து ரிஷிகளுக்குத் தருமோபதேசம் செய்தான்.

(15) அனேக மகரிஷிகளும் அவர் முகம் தாம் கேட்டுணர்ந்தபடியே உலகத்தில் தருமப்பிரதிட்டைக்காக அநேக தருமசாஸ்திரங்களைச் செய்தருளினர்.

(16] அவைகள் காலங்கழிய ஒழிந்திட்டால் பிரம்மதேவன், உபதேசம்பெற்ற மகரிஷிகள் யுகங்கடோறும் அவைகளை மீண்டும் செய்தருள்வர்.

(17) பதினெட்டுப்புராணங்களை வியாஸர் சொன்னார். அவர் ஒவ்வொரு யுகத்துக்கும் புராணகர்த்தா. தர்மசாஸ்திரம் அறிந்தவர்.

(18) சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருக்தம், சோதிடம், சந்தம், ந்யாயவித்தை இவைகள் எல்லாவற்றிற்கும் [மேற்கண்ட வேதபுராணங்கட்கு] உபபிருங்கணங்களாம்.

(19) மேற்சொன்னபடி பதினான்கு வித்தைகளான வேதாங்கங்கள் நான்குடன்கூடின இவையே தருமப்பிரமாணங்கள். மற்றதில் தருமம் இல்லை.

(20) இங்ஙனம் பிரம்ம பரம்பரையிற்றோன்றிய தருமத்தை எனது ஆணையால் மநு வியாஸர் முதலியவரே அவ்வப்பொழுது பிரளயம்வரை அழியாது காத்துவருகிறார்.

(21) அவ்வாதிகாரிகர் எல்லோரும் பிரம்மதேவனுடன் பிரம்மவிசாரஞ்செய்து பரார்த்தம் இரண்டும் முடிந்து பிரம்மப்பிரளயம் வரும்பொழுது முக்திபெறுவரர்.

(22) ஆகையால் எவ்விதமாவது முயன்று தருமத்திக்காகவே தங்களை யாச்சிரயிக்கவேண்டும். தருமத்துடன் கூடிய ஞானமே பரப்பிரம்மத்தை விளங்கச்செய்யும்.

மேற்கண்ட வசனங்கள் ஸ்ரீ பார்வதிதேவியால் பர்வதராஜனுக் குபதேசார்த்தமாய் கருணைகூர்ந்தருளப்பட்டன.

அவற்றுள் க-வது வசனம் தருமஞான பக்திகளை மோக்ஷமார்க்கமெனக் காட்டியவுடன் எங்கேனும் அவைதிகர் உட்புகுந்து தமது சரியைகளை அதன்பொருட்படுத்துவார் எனக்கருதியே உ-வது வசனத்தால் அந்ததருமம் வருணாசிரம சம்பந்தமுற்றதும் சுருதி ஸ்மிருதிகளில் உள்ளதுமே என்று நிரூபிக்கப்பட்டது. அதுமட்டிலும் ஒழியாது சுருதி என்ற பெயரையும் தற்காலத்தவர் தத்தம்புத்தகங்கட்கும் பெயராகவழங்க நேர்ந்தமைபற்றி இவ்வெதிர்கால துற்சம்பவத்தால் சுருதி, ஸ்மிருதிச் சொற்களுக்கு வரப்போகிற துர்தசையை ஒழிக்கவேண்டியே ௫-வது வசனம் ‘ருக்கு முதலியனவே பராசக்தி ஸொரூபமான வேதங்கள்’ எனவும், சா கச, கரு, கசா, கஎ, கஅ, ககூ, உ௰, உக, இருபத்திரண்டாவது வசனங்களால் அவ்விருசொற்களுக்கும் விரிந்தவுரை ஒன்று செய்யப்பட்டது. மேலும் கூவது வசனத்தில் அந்த வேதங்களில்சொன்ன தருமமே மோக்ஷசாதகம் என்றதனுல்மட்டில் ஒழிந்திட்டால் இத்தாந்திரிகர் ‘சிவன், பூதி வில்வம்’ என்றசொற்கள் கண்டவிடங்களில் இவையெல்லாம் அவைதிகாகம கன்மங்களைக் கூறியனவென உரிமைபாராட்டி அவ்வவைதிக கன்மங்களுக்கேலாத வைதிகப்பட்டம் தரிப்பித்திடுவார் என்று கருதியே ‘வேதங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும் சொல்லப்பட்ட யாகாதிகளே தருமங்கள்’ என்று நிருபிக்கப்பட்டது. வேதங்களும் தர்மசாஸ்திரங்களும் இவ்வையர்கொண்ட சித்தாந்தநூல் நிந்தித்தொதுக்கிய பசுயாகாதிகளையே விதித்தனவாதலால் இது இவர்க்குச் சேஷ்டையினிடத்தைத் துலைத்ததேயாம். அப்பொருளையும் அகிலமாதாவான ஆதிசக்தியார் அகத்தேவைத்தருளாது சு-வது வசனத்தால் ஸ்பஷ்டமாய் ‘வேதங்களே தருமஹேதுக்கள்’ என்றும், அதைத்தனது சொரூபம் என்றும் உபதேசித்தனர். அம்மட்டோடும் தாந்திரிகர் அடங்கிடுவர் என ஒழியாது, ௫-வது வசனத்தால் வேதங்கள் தனது திவ்யரூபங்கள் என்றுபதேசித்து எ-வது வசனத்தால் அவ்வைதிககன்மங்களை விட்டவர்க்கு நரகப்பிராப்தியையும் நிரூபித்து அ-வது வசனத்தால் ஸ்பஷ்டமாய் வேதவித்தையின்றி மற்றையவித்தைகளைப்பற்றி யொழுகுவோரை ‘துவிஜாதிகள் பார்க்கவுங்கூடாது’ என்று ‘பிராம்மண க்ஷத்திரிய வைசியர்’ எனப்படும் மூவ்வருணத்தாரான வைதிகருடைய கண்பார்வையுங்கூட அவருக்கு அயோக்யம் என்றதால் தாந்திரிக நிந்தையும் செய்யப்பட்டது. ஒருசமயம் அத்தந்திரங்கள் தாம்கொண்டவற்றிலும் வேறென இவர் தப்பிமறைய வொட்டாது கூ-வது வசனத்தால் வேதம் ஸ்மிருதி இவைகளில் நிந்திக்கப்பட்டது எதுவோ அதுவெல்லாம் தாமஸருக்கே யுரியது என்று பொதுவகையிற் கூறி அவ்வளவில் விடாது சிறப்பாய் அவற்றின்பெயரையும் ௰, கக, கஉ-வது வசனங்களால் காபாலாதிகளே அவைதிகதந்திரங்கள் எனவற்புறுத்தி யுபதேசித்தருளினர்.

மேல்வேதங்கள் ருக்கு முதலியனவாயின் ஆருக 'மற்றுதருமசாஸ்திரங்கள் என்பனவாவது எமது தந்திரங்களாகாவோ' வென்று தாந்திரிகர்க்கு நிகழும் சங்கையை ஒழித்திடவே ௩௩-வது வசனம் முதலியவைகளால் ஸ்பஷ்டமாய் அவை சுவாயம்புவமனு முதலியோர் வசனங்களே என நிருபித்தருளுவாராயினர். அங்ஙனமாயின் புராணாதிகளின் பெருமை வீணேயென வாசங்கை நிகழாவண்ணம் ௩௭-வது வசனமமுதல் ௨௨-ம் வசனம வரையில் பதினெண் புராணங்களும் கற்பங்கடோறும் வியாஸாதிகாரம் பெறும் மகரிஷிகளால் வெளியிடப்படும் வேதோபப்பிரும்மணங்களென்றும் அவ்விதம் அநாதி நித்திய சுயம்புவான வேதத்திற்கும் அதனுபபிருங்கணங்களுக்கும் ஆதியுபதேசம் செய்பவர் பிரம்மதேவனென்றும் அவன் திருவுபதேசத்தில் வேதங்களையும் புராணங்களையும் பொருட்படுத்துங் கருவிகளாயமைந்தன சிக்ஷை முதலிய ஆறங்கங்களே எனவும், அதற்கு விசாரசாஸ்திரமாயுள்ளது நியாயமீமாம்ஸைக ளெனவும், வேதங்கள் நான்கு, தர்மசாஸ்திரங்கள், அங்கங்களாறு, மீமாம்ஸை, நியாயசாஸ்திரம், புராணமெனப் பதினான்கு வித்தைகளே ஊழிகாலம்வரை உயிர்கள் உய்யுமாறு எம்மானையால் உலாவிவரு முண்மைநூல்களெனவும், இப்பதினான்கு வித்தைகளின் ஸம்பந்தமற்றப் புறநூல்களில் தருமமெனபது சிறிதுமில்லை யெனவும் இவ்வித்தியாதானப் பிரசாரணாதிகாரிகளான மனுவியாஸாதி மகரிஷிகள் சதுர்முகஸமானர்களாய் அவருடன்கலந்து அவராயுள்வரையில் அல்லும்பகலும் வேதாந்தவிசாரஞ்செய்து கற்பாந்தகாலத்தில் சுத்த சச்சிதாநந்த கைவல்யம் பெறுவாரெனவும் நிருபித்தருளினர். இறுதியிலுள்ள 22-ம் வசனத்தில் தருமங்களுக்கெனவே வேதவழி பற்றவேண்டுமென்றும், அன்னெறியே அளவிலாப் பேரானந்த வறிவு அருட்டுரை சேர்க்குமென்றும், புராணாதி பத்துவித்தைகளால் விரித்து உரைசெய்யப்பெற்ற வேதங்களே பிரம்மத்தை விளக்கும் பரப்பிரும்மவித்தையாமெனவும், எவ்விதத் துயரமுற்றும், முயற்சியுற்றும், முமுட்சுவாயுள்ளான் அவ்வேதங்களையே பற்றி யொழுகவேண்டுமெனத் தேற்றி முடிப்புரைகூறி உபதேசித்தருளின ஆதிசக்தியின் அருளுரைகளனைத்தும் வைதிகத்தின் பெருமையையே விளக்கி அவைதிகாகமங்களை யொதுக்கிய நேர்மைகண்டும் இவர் அவைதிக பாசுபதாகமங்கட்கு இப்புராணம் ஸாதகமென எண்ணி மயங்கியதை இதனால் ஒரு சிறிது வெளியிட்டோம். அதே அத்தியாயத்தில் பரதத்துவஸ்வரூபமும் அத்வைதமெனவும் அது நிஷ்பிரபஞ்சமெனவும் நிருபிக்கப்பட்டது. பதிமூன்றுமத்தியாயத்தில் ஸமஸ்தமான வைதிகாக்னிகளும் சிவஸ்வரூபமென்று நிருபிக்கப்பட்டது. பதினான்காமத்தியாயத்தில் ஸுசீலமகாராஜனுடைய உபாக்கியானந்தொடங்கி,

௬— (௧) யாஜ்ஞவல்க்யோ வஸிஷ்டோ வேதவெ தாம்பவாரத:|

(௨) ஸோயீத்யவியவஷெட்சு நயீத்யதவிஸி ஷ்டித:|

(௩) உக்தம் வசெ ஹாஸ்யவொமாக ஸகூரஸம் வ்ருதியகுவிக|

(௪) ஸக்ருத்வா தீர்த்தஸம்ஸேவம் ஸ்வாத்யாயெ தவவிஷ்டித:|

(௫) ஜகாம ஹிமவத்வ்ருஷ்டம் கதாசித் ஸித்த ஸேவிதம்||

(௬) தத்ர யோகி வதனாம யோகிவிஷ்டிநெ த்ம வநம்| தவஸ்யதெப்ராமிநாம் தத்ம தத்ம் ப்ருஹ்மவிவிஷாம்|

(௭) ப்ராஸ்வாக தஸம்ஸ்தீனாநாம் ஸிரஸ்யா யாயவாம்ஜலிம்| ஸம்ப்ரேக்ஷமாணோ ஹ்ரஸ்வம் தஷாவவரமெஸ்வரம்|

(௮) ருத்ராத்யாயெநமிநிஸம் ருத்ரஸூக்தவிதெநவ| அந்யைஸ்ரு தி ஸ்தோத்ரைஸ்தாம் ஸமவெ துஷ்டாவ ஸம்ஹரம்||

VI (1) தருமநிஷ்டனாய் நல்லுருவம் பொருந்தியவனாய் வேதவேதாங்கங்களைக் கற்றுணர்ந்தான்

(2) அவன் விதிவழுவாது வேதங்களையோதி தவத்திலுறுதிகொண்டான்.

(3) தருமங்களையறிந்த அவ்வரசன் பாக்கியவசத்தால் ஸன்னியாசத்தில் வரவுற்றான்.

(4) அவன் தீர்த்தஸேவைசெய்து வேதாத்தியயனமென்னுந் தவத்தையே உறுதியாகக் கைக்கொண்டான்.

(5) ஒருக்கால் சித்தர்கள் வசிக்கும் இமயமலையின் பக்கத்தை யடைந்தான்.

(6) அங்கு யோகிகள் அணுகக்கூடியதும் பிருமத்துவேஷிகள் அணுகக்கூடாததும் தருமபதமெனப் பெயர் பெற்றதும் தருமசித்தியைக் கொடுப்பதுமான காட்டையொன்றைக் கண்டான்.

(7) அங்கு சூரியமண்டலத்திலுள்ளப் பாசிவமூர்த்தியைத் தியானித்து சிரமேற் கைகூப்பி அக்கதிரவனையே நோக்கிப் பரமேசுவரனைத் துதித்தான்.

(8) ருத்திராத்தியாத்தாலும் ருத்திரசரிதத்தாலும் மற்றுமுள்ள வேதஸம்பவ சிவத்தோத்திரங்களாலும் ஈசனை (இடையறுது துதித்தான்) என்பன ஈருக ஸ்பஷ்டமாய் பரமபாசுபத சிகாமணியான ஸ்ரீ சுசீலமகாராஜன் முன்னெடுத்து நிருபித்த ஆதிசக்தி பர்வதராஜ ஸம்வாதமாகிய ஐந்தாம்விஷயத்திற் கண்டவாறு ஆதியில் வேதங்களையும் வேதாங்கங்களையும் விதிவழாது பிருமசரியத்தில் கற்றுணர்ந்தான்.

இன்னும் வரும்.